# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 04 ஞாயிற்றுக்கிழமை (18-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily ஒளி: 171


# திட்டமிட்ட இலக்கை அடையும்வரை இராணுவ நடவடிக்கை தொடரும்!

## றொஹான் தளுவத்த தெரிவிப்பு

கொழும்பு, மே 18

" 'ஜெயசிகுறு' (வெற்றி உறுதி) இராணுவ நடவடிக்கை அதன் இலக்கை அடையும் வரை தொடரும். எக்காரணம் கொண்டும் கைப்பற்றிய இடங்களில் இருந்து படையினர் வாபஸ் பெறப்படமாட்டார்கள்"

மேற்கண்டவாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்தை தெரிவித்தார்.

ஓமந்தைப்பகுதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்று படைநடவடிக்கையை நேரில் பார்வையிட்ட பின்னர் 'ஐலண்ட்' ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியிலே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

காயமடையும் படையினருக்கு உரிய மருத்துவ சிகிச்சைகளை அளிக்க வவுனியாவிலும் அனுராதபுரத்திலும் உரிய, ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த, பொலீஸ் மா அதிபர் ராஜகுரு ஆகியோருடன் றொஹான் தளுவத்தை ஓமந்தை சென்றது தெரிந்ததே.

(இ- ஐ- 150)

# ஓமந்தையைக் கைப்பற்ற நடந்த கடும் சண்டை!

கொழும்பு, மே 18

கடந்த வெள்ளிக்கிழமை ஓமந்தையின் மையப் பகுதியை நோக்கி படையினர் நகர்ந்தபோது படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சண்டையில் படையினர் தரப்பில் 20 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 40 பேர் காயமடைந்தனர் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

இதற்கிடையில் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகத்தின் தகவலின் படி, இதுவரை நடைபெற்ற சண்டைகளில் 41 படையினரே கொல்லப்பட்டதாகவும் 50 க்கு மேற்பட்ட படையினரே காயம் அடைந்ததாகவும் 150 க்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது.

புலிகள் சென்ற மூன்று வாகனங்கள் விமானத் தாக்குதலுக்கு உள்ளானதாகவும் அது தெரிவித்தது.

எனினும் குறைந்தது 70 படையினராவது இறந்திருக்கலாம் என்றும் 350 படையினர் வரை காயமடைந்

(8 ஆம் பார்க்ம் பார்க்க)

## படையினர் ஓமந்தையை கைப்பற்றியது எப்போது?

கொழும்பு, மே 18

படையினர் ஓமந்தையை எப்பொழுது கைப்பற்றினர்?

இது குறித்து பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு வவுனியாவில் இருந்து ஜினசேன ரத்துக்கமகே அளித்த பேட்டியில் தெரிவித்திருப்பதாவது:-

''வெள்ளி இரவுதான் படையினரால் ஓமந்தை நகரை முற்றிலுமாகக் கைப்பற்ற முடிந்தது.

இந்தச் சண்டையின் போது விடுதலைப் புலிகள் கனரக மற்றும் சிறு ஆயுதங்கள் மூலம் படையினர் மீது தாக்குதல்களை நடத்தினர்: இந்தத் தாக்குதல் காரணமாக படையினர் தரப்பில் 20 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கைதானோர் விடுதலைக்கும் கட்சிகளுக்கும்தொடர்பில்லை

## இராணுவத் தரப்பு விளக்கம்

யாழ்ப்பாணம், மே 18

சந்தேகத்தின் பேரில் படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கும் யாழ். நகரில் செயல்படும் அரசியல் அமைப்புகளுக்கும் எந்த விதத் தொடர்புமில்லை.

— இவ்வாறு நிலைமையை விளக்கி, யாழ். இராணுவ வட்டாரங்கள் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளன.

யாழ். நகரில் நிலைகொண்டுள்ள 512 ஆவது பிரிகேட் படையணி நேற்று விடுத்த, இந்தச் செய்திக் குறிப்பில் இராணுவ வட்டாரங்கள் மேலும தெரிவித்திருப்பதாவது:-

யாழ்ப்பாணத்தை மீட்ட 'ரிவிரஸ' நடவடிக்கையின் பின்பு, பொதுமக்களுடன் நிற்கும் தீவிரவாதிகளைக் கைது செய்யும்போது பாதுகாப்புப் படையினர் பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பர் :-

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் எவராவது — எந்த நேரத்திலாவது — கைது செய்யப்பட்டால் அவரது உறவினரிடம் அல்லது அவரது நெருங்கிய சொந்தக்காரரிடம் உடனடியாக — அல்லது அது முடியாவிட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புளியங்குளம் நோக்கி படையினர் ஷெல் வீச்சு

ஓமந்தை வரை நகர்ந்த படையினர் ஓமந்தையில் இருந்து புளியங்குளம் நோக்கி தற்பொழுது ஷெல் தாக்குதலை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புளியங்குளத்தில் விமானத் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. ஓமந்தை புளியங்குளம் பகுதிகளில் இருந்து பெரும்பாலும் மக்கள் வெளியேறிவிட்டனர். (இ-5)

# எழுதுமட்டுவாளில் புலிகள் தாக்குதல்!

## 3 படையினர் பலி; நால்வர் காயம்

கொழும்பு, மே 18

எழுதுமட்டுவாளில் உள்ள படையினரின் முன்னணிக் காவலரண் மீது நேற்று முன்தினம் அதிகாலை 1.00 மணி அளவில் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்த தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர் என்றும் நான்கு படையினர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது

இந்தச் சம்பவத்தின் போது படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகவும் —

நேற்று முன்தினம் காலை 6 00 மணி தொடக்கம் நண்பகல் வரை மிருசுவில், சங்கரப்பிள்ளை ஏற்றம் ஆகிய இடங்களில் இருந்து பாதுகாப்பு அரணுக்கு அப்பால் செல்வது தடைசெய்யப்பட்டிருந்ததாகவும் —

படையினர் தேடுதல் நடத்திவிட்டுத் திரும்பிய பின்னர் இப்பாதை போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-5-117)

# விசேட அதிரடிப்படை முகாம் மீது புலிகள் ஷெல் தாக்குதல்!

## மண்முனையில் சப இன்ஸ்பெக்டர் பலி

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனையில் உள்ள விசேட அதிரடிப் படை முகாம் மீது புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலில் அந்த முகாமிலிருந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்டார். விசேட அதிரடிப் படையினர் இருவர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினமிரவு 9 45 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

புலிகள் வாவிக்கு மறுகரையிலுள்ள கொக்கட்டிச்சோலையில் இருந்து இந்த ஷெல் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

படையினர் நடத்திய பதில் தாக்குதலில் தாழங்குடாவில் வீடு ஒன்றின் மீது விழுந்த ஷெல்லினால் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார் மகிழந்தீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் விழுந்த ஷெல்லினால் இரு பக்தர்கள் காயம் அடைந்தனர்.

இந்தக் கோயிலில் உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே ஷெல் விழுந்தது. (இ-21)

# கூட வந்தவரைச் சுட்டுவிட்டு 4 படையினர் தப்பினர்!

## மருதானையில் நேற்று சம்பவம்

படையிலிருந்து தப்பி ஓடி மீண்டும் கைதான 14 இராணுவத்தினரில் நால்வர் நேற்று மீண்டும் தப்பிச் சென்றுவிட்டனர்.

நாரஹேன்பிட்டியில் உள்ள இராணுவ — பொலீஸ் தலைமை அலுவலகத்துக்கு விசாரணைக்காக இவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட போது மருதானை டீன்ஸ் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவர்களில் ஒருவர் இவர்களைக் கூட்டி வந்த படையினரில் ஒருவரின் துப்பாக்கியை திடீர்எனப் பறித்து சுட்டார் என்றும்—

அதன் பின்னர் அவரும் மற்றும் மூவரும் தப்பிச் சென்று விட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளானவர் மரணமானார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இன்றைய புதிய வெளியீடு!
அர்ஜுன், ரம்பா நடித்த
★ அடிமைச் சங்கிலி
எமது அடுத்த வெளியீடு
கார்த்திக் நடித்த
★ பிஸ்தா
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம். (47008)



# மே மாதப் பயிற்சிப் பரீட்சை

**3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L**
வகுப்புகளுக்கான பரீட்சைகள்
21-05-97 புதன் காலை 8-00 மணி
பரீட்சைக்குப்பின் வினாத்தாள்களை விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைப் பகுதி **BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(47012)


## யாழ். பல்கலைக்கழக 1 ஆம் வருட வணிகத்துறை மாணவர்களுக்கான வேண்டுகோள்

1 ஆம் வருட வணிகத்துறை மாணவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட வணிக மாணவர் மன்றத்தின் அதிர்ஷ்டலாபச்சீட்டு புத்தகங்களையும் அதற்குரிய பணத்தினையும் 19-05-1997 திங்கள் காலை 9-00 மணிக்கு வணிகத்துறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

- செயலாளர்
வணிக மாணவர் மன்றம்


(42010)


# நாடகமும் அரங்கியலும்

**G. C. E. A/L**
சோபோகிலிசின்
மன்னன் ஈடிப்பஸ்
தமிழில்
குழந்தை ம. சண்முகலிங்கம்
(விற்பனையாகிறது)
விலை :- 60/-

தொடர்பு:
இல. 19, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (47011)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி ஸ்ரீகரன்

தோற்றம்: 28 — 10 — 1937
மறைவு: 04 — 04 — 1997

பிரிந்து செல்ல உங்கள் மனம் விரும்பியதேன்?
பெரும் புயலில் தவிக்கவைமை விட்டதுமேன்?
அருமை மனையாள், மக்கள் தவித்து நிற்க
அவனிவிட்டு அப்பா நீர் சென்றதுமேன்?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.
(47224)

## மிதிவெடியில் சிக்கிய பொலீஸார்

வாழைச்சேனையில் நேற்றுக் காலை இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காலை இழந்தார்.
(இ-21)

## படையினரிடம் சிக்கிய 26 பேர்

நெடுங்கேணி சேனைப்பிளவு கிராமத்தில் படையினரிடம் சிக்கிய 26 பேர் நேற்று வவுனியா அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
(இ-21)

## மயானத்தில் கட்டட வசதி

திருநெல்வேலி, மே 18
மானிப்பாயிலுள்ள பிப்பிலி இந்து மயானத்தில் கட்டடம் ஒன்றை நிறுவுவதற்கு வலி. தென்மேற்கு பிரதேச சபை தலைமைச் செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிற . இக் கட்டடத்தை அமைப்பதற்கு சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-135)

## சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், மே 18
மானிப்பாய், நவாலிப் பகுதிகள் நேற்றுப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன. (இ-15)

## கலைப்பீட மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், மே 18
யாழ். பல்கலைக்கழக நான்காம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான போக்குவரத்துக்கான விண்ணப்பம் நிரப்புவது தொடர்பான ஒன்று கூடல் இன்று காலை 10-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.
(இ-5)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், மே 18
சுன்னாகத்துக்கும் மல்லாகத்துக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அமுக்கவெடிச் சம்பவத்தின் போது மரணமாகி யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இனந்தெரியாத சடலம் உறவினரால் அடையாளம் காணப்பட்டது.

அவ்விடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வடிவேலு (வயது 80) என்பவரே உயிரிழந்தவராவார். (இ-15)


**PURE/ APP. PAPER CLASS**
Mr. S. சிவலோகநாதன்
ஆரம்பம்: **19-5 Mon.** 8 A. M.
**SHAMROCK**
யா/ ஈச்சமோட்டை வீதி.
(46991)



# தையல் வேலைகள்

ஆண், பெண் இருபாலாருக்கும் தேவையான உடைகள் நியாயமான கட்டணத்தில் தைத்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு:-
யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வரையறுக்கப்பட்டுள்ளது.
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-728)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வரத்தினம் நடராஜா

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி செல்வரத்தினம் நடராஜா 17-5-1997 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், காசிநாதர் (உதவி முகாமையாளர், தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை), லோகசறோஜா, கனகசுந்தரம் (பெறாமகன் - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாம்பிகை, செல்லத்துரை (உத்தரவு பெற்ற நில அளவையாளர் - இயக்குநர், ஐடியல் கல்வி நிறுவனம், நீர்வேலி), புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, வல்லிபுரம் மற்றும் செல்வநாயகம், நடராஜா, சின்னராசா (ஓய்வுபெற்ற மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை - ஆசிரியர், ஏழாலை, சைவ சன்மார்க்க வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரமணி, சிறிகாந்தன் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), ஜெயகாந்தன், திருமதி சி. புஷ்பா (பொறியியலாளர், நோர்வே), திருமதி தெ. ரஞ்ஜினி (எழுதுவினைஞர், கனடா), திருமதி கி. பாரதி (லண்டன், முன்னாள் தொழில் நுட்ப உத்தியோகத்தர், யாழ் மருத்துவபீடம்), தயாபரன் (பொறியியலாளர், லண்டன்), சுகந்தினி (தொழில் நுட்ப உத்தியோகத்தர், யாழ். மருத்துவபீடம்), ஜீவா (மாணவி, யா/ வேம்படி மகளிர் கல்லூரி), ரஹீதன் (மாணவன், மகாஜனாக் கல்லூரி), கௌசலா, கலாஜீவன் (மாணவர்கள், அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், வேணுகா, ஆர்த்திகா, கிரீஷன், பானுஷா, வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-5-97 இல் நீர்வேலியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சின்னராசா
(சகோதரன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(46990)

## திருமதி நித்தியானந்தராணி முத்துக்குமாரசுவாமி

கலட்டி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி நித்தியானந்தராணி முத்துக்குமாரசுவாமி அவர்கள் 15-05-97 காலை 7,00 மணியளவில் 36, பொஸ்வெல் பிளேஸ், கொழும்பு - 6 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பல்வைத்திய நிபுணர் சதா முத்துக்குமாரசுவாமியின் அருமை மனைவியும், சதாலோகித சிவா (கொழும்பு), திருமதி திலகசக்தி, ஆராஅமுதன் (முன்னாள் விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக் கழகம் - லண்டன்), திருமதி தர்மசுந்தரி, சுதர்சன் (முன்னாள் சமூகவியல் விசேட பகுதி மாணவி, யாழ். பல்கலைக்கழகம் - கனடா), திருமதி மாபிரேம சாந்தி, இரவிராஜ் (முதுநிலைப் பட்டதாரி மாணவி - இந்தியா), சுவவிநோதினி (உயர்தர வகுப்பு மாணவி - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான வி. சிவசுப்பிரமணியம் (முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), மதியாபரணம் ஆகியோரின் செல்வப் புதல்வியும் மற்றும் யுவராணி மகாதேவா, ஸ்ரீ விக்னேஸ்வரராஜா (ஜேர்மனி), ஸ்கந்தகுமாரி இராமலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகாதேவா (முன்னாள் உதவி அரசாங்க அதிபர்), இராமலிங்கம் (இளைப்பாறிய இறைவரி உத்தியோகத்தர்), சறோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-05-97 சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
ஸ்கந்தகுமாரி இராமலிங்கம்
(சகோதரி)

39/3, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.
(46997)

## திருமதி தவமணி கந்தையா

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தவமணி கந்தையா 14-05-1997 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இ கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், கருணானந்தன் (பட்டயக்கணக்காளர், சம்பியா), பவானந்தன் (பொறியியலாளர், கனடா), இரவீந்திரன் (ஆசிரியர், சாஹிரா கல்லூரி, மருதானை), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. துரைராஜா, நவரத்தினம் கண்மணி, காலஞ்சென்ற ஜெயமணி மற்றும் ருக்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தியாகராஜா, காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் புவனேஸ்வரி, விமலா ஆகியோரின் அன்பு மைத்துனியும், துஷ்யந்தி, திமா, ஜெபந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும்; கஜன், நிரான், சத்தியபாமா, பாலமுரளீ, நிமலன், கிஷோக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-5-97) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இரவீந்திரன்
(மகன்)

12/23, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(46993)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சரை அரசபடை கொன்றது!

# தலைநகருக்குள் கிளர்ச்சிப் படை பிரவேசம்!!

## ஸயரில் அபாயகரமான அரசியல் நெருக்கடி

கின்ஸாசா, மே 18

தனது அதிகாரங்களை உரிய முறைப்படி ஒப்படைக்காமல் அதிபர் முபுட்டு திடீரென நாட்டைவிட்டு வெளியேறி விட்டதைஅடுத்து ஸயர் நாட்டின் தலைநகர் கின்ஸாசாவில் அபாயகரமான சூழ்நிலை உருவாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஸயர் பாதுகாப்பு அமைச்சரும் ஸயர் இராணுவத்தின் பிரதம அதிகாரியுமான ஜெனரல் மஹேலே லெக்கே கொகொங்கே அதிபர் முபுட்டுவின் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டுள்ளார்.

அதிபர் முபுட்டு தனது பதவியைத் துறந்து தலைநகரை விட்டு வெளியேறிச் சென்ற சில மணி நேரத்தில் அரச படைகள் இவரைக் கொலை செய்தன.

கிளர்ச்சிப் படைகளின் நெருக்குப் பிடிக்குள் தலைநகர் சிக்கியதை அடுத்து அதிபர் முபுட்டு தனது இராணுவ உயரதிகாரிகளின் ஆலோசனையைக் கோரியிருந்தார் என்றும் —

அப்போது அரசபடையினரால் தலைநகரைப் பாதுகாக்க முடியாது என்று பாதுகாப்பு அமைச்சர் மஹேலே தெரிவித்த ஆலோசனையை அடுத்தே அதிபர் முபுட்டு தலைநகரைவிட்டு வெளியேற முடிவெடுத்தார் என்றும் தகவல்கள் வெளியாகின. இதனால் ஆத்திரமடைந்த அதிபரின் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு அமைச்சரைப் படுகொலை செய்ததாக முற் கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை —

லோறன் கபீலா தலைமையிலான கிளர்ச்சிக் கூட்டணிப் படைகள் நேற்று தலைநகர் கின்ஸாசாவுக்குள் பிரவேசித்தன. முன்னதாக கின்ஸாசா விமான நிலையப்பகுதிக்குள் சென்ற கிளர்ச்சிப் படைகளை அங்கு நின்ற மக்கள் வெற்றிக் களிப்புடன் வரவேற்றதாக அறிவிக்கப்பட்டது.

### விமான நிலையத்தை கைவிட்டு அரச படைகள் வாபஸ்

தலைநகர் கின்ஸாசாவில் இன்னமும் தங்கியுள்ள செய்தியாளர்களின் கூற்றுப்படி அங்கு அபாயகரமான சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் அங்குமிங்குமாக வேட்டுச் சத்தங்கள் கேட்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

''நகரில் பெரும் பீதி உறைந்துள்ளது; எந்தவேளையிலும் எதுவும் நிகழலாம்'' என்று வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

கின்ஸாசாவிமான நிலையத்தைக் கைவிட்டு அங்கிருந்து அரச படைகள் வெளியேறி நகரின் மையப்பகுதிக்குச் சென்றிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

அதிபர் முபுட்டுவின் குடும்பத்தவர்களும், உறவினர்களும் நெருங்கிய சகாக்களான படை அதிகாரிகளும் அயல் நாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

### அரச படைகளை சரணடைய உத்தரவு

அதிபர் முபுட்டுவின் வெளியேற்றத்தை அடுத்து அரச படையினரைச் சரணடையுமாறு கிளர்ச்சியாளர் கூட்டணித் தலைவர் லோறன் கபீலா உத்தரவிட்டுள்ளார்.

அரசுப் படையினரின் ஒரு சாரார் இறுதிவரை சண்டையிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளர்ச்சிப்படைகள் நகரின் மையப்பகுதிக்குள் பிரவேசித்து விட்டதாக உறுதிப்படுத்தப் படாத தகவல்கள் தெரிவித்தன.

ஸயரில் அதிகாரமாற்றம் நெருங்கி விட்டது. அதிபர் முபுட்டுவின் 32 வருடகால சர்வாதிகார ஆட்சி அஸ்தமித்து விட்டது என்று மேற்குலக விமர்சகர்கள் தெரிவித்தனர்.

கிளர்ச்சிப்படைகள் கின்ஸாசாவைப் பூரணமாகக்கைப் பற்றியதும் தலைவர் கபீலாவிடம் அதிகாரம் கை மாறும் என்று கின்ஸாசாவில் உள்ள மக்கள் எதிர்பார்ப்பதாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

(ஐ-10)



## அதிபர் முபுட்டு எங்கே?

கின்ஸாசா, மே 18

தலைநகர் கின்ஸாசாவை விட்டு வெளியேறி விட்ட அதிபர் முபுட்டு செசிசிகோ தற்போது எங்கே தங்கியுள்ளார் என்பது குறித்து முரண்பாடான தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

அதிகாரத்தைக் கையளித்துவிட்டு நாட்டை விட்டு வெளியே வாழ அதிபர் முபுட்டு முடிவு செய்து விட்டதாகக் கின்ஸாசாவின் அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலையில் கின்ஸாசா விமானத் தளத்தில் இருந்து புறப்பட்ட அதிபர் முபுட்டு வட ஸயரில் உள்ள தனது சொந்த ஊரில் அமைந்துள்ள காட்டு மாளிகைக்குச் சென்றுள்ளார் என்று முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன.

ஆனால் அவர் மொறோக்கோ நாட்டுக்குச் சென்றுவிட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. பிரான்ஸ் நாட்டுக்கு அல்லது சுவிஸுக்கு அவர் சென்று விடக்கூடும் என்று முன்னர் எதிர்பார்க்கப் பட்டது.

இதேவேளை அதிபர் முபுட்டு நாட்டை விட்டு வெளியேறிய செய்தி பரவியதும் அவரது உறவினர்களும், ஆதரவாளர்களும் கின்ஸாசாவை விட்டுத் தப்பியோடத் தொடங்கினர்.

அவர்களில் பலர் ஸயர் நதியைக் கடந்து கொங்கோவுக்கும், சிலர் தென்னாபிரிக்காவுக்கும் தப்பிச் சென்றுள்ளனர்.

(ஐ)

## தகவல் கொடுத்த நபருக்கு சிறை

ரஷ்யாவின் நீர்மூழ்கிக் கப்பல் தொடர்பான இரகசியங்களை அமெரிக்காவுக்குத் தெரிவித்துவந்த ஒருவருக்கு ரஷ்யாவில் 12 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மோசஸ் இங்கேல் என்ற இந்த 60 வயது நபரின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சென். பீற்றேஸ்பேர்க் இராணுவ ஆராய்ச்சி நிலையத்தில் மோசஸ் இங்கேல் பணியாற்றி வந்தார். (ஐ-10)

## சமரச முயற்சி தோல்வி

மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளை மீட்டெடுக்க கடந்த 9 நாள்களாகத் தீவிரமாக ஈடுபட்டிருந்த அமெரிக்கப் பிரதிநிதி டெனிஸ் றொஸ்சின் முயற்சி தோல்வியடைந்துள்ளது.

தோல்வியினால் ஏற்பட்ட சலிப்புடன் பலஸ்தீனியர்களின் எதிர்ப்புக்களையும் அவர் சந்திக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் யூதக் குடியேற்றத்தை அமைக்கும் திட்டத்தைக் கைவிட மறுப்பதால் டெனிஸ் றொஸ்சின் முயற்சிகள் யாவும் வீணடிக்கப் பட்டுள்ளது என பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுக்கு கடித மூலம் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## சுவிஸ் அரசு நடவடிக்கை

ஸயர் அதிபர் முபுட்டுவின் சுவிற்சர்லாந்திலுள்ள உல்லாசமாளிகையை சுவிஸ் அதிகாரிகள் கையகப்படுத்தியுள்ளனர்.

அதிபர் முபுட்டு பதவிவிலக கிளர்ச்சியாளர்கள் விதித்த காலக்கெடு மற்றும் எச்சரிக்கைகளை அடுத்து சுவிஸ் நிர்வாகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

முபுட்டுவின் சுவிஸ் உல்லாச மாளிகை சுமார் 25 கோடி ரூபா மதிப்புள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

# 156 வருட பிரிட்டிஷ் ஆட்சியின் பின்

# சீனாவிடம் மீண்டும் ஹொங்கொங்!

## 99 வருட குத்தகை ஜூன் 30 நள்ளிரவுடன் முடிவு

எதிர் வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவுடன் ஹொங்கொங்கில் பிரிட்டனின் 99 வருட ஆட்சி முடிவடைகிறது.

ஹொங்கொங்கின் பழைமை வாய்ந்த கிரவுண் கொடியும் பிரிட்டனின் யூனியன் ஜாக் கொடியும் இறக்கப்பட சீன — ஹொங்கொங் கொடிகள் பறக்க விடப்பட உள்ளன.

ஹொங்கொங் சீனாவின் நுழை வாயிலில் அமைந்துள்ளது. அபின் யுத்தத்தின் போது ஹொங்கொங்கை பிரிட்டன் கைப்பற்றிய போதிலும், சீனாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஹொங்கொங் பிரிட்டனுக்கு 99 வருடகால குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. அந்த 99 வருட குத்தகைக்கால முடிவே 1997 ஜூன் 30 ஆகும்.

### சீன ஆளுநராக டங்

சீன ஆட்சியின் கீழ் மீண்டும் வரும் ஹொங்கொங்கின் முதலாவது சீன ஆளுநராக சி. செ. டங் என்பவரை சீன அரசாங்கம் நியமித்துள்ளது.

ஜூன் 30 ஆம் திகதி நள்ளிரவு மிகவும் அமைதியான முறையில் அதிகார மாற்றம் இடம் பெறப்போகிறது.

ஜூன் 30 இல் அதிகாரம் தான் கைமாறப் போகிறது. தற்போதைய ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை. ஹொங்கொங் டொலரே தொடர்ந்து பாவனையில் இருக்கும். அரசியல் — பொருளாதாரத் துறைகளில் தற்பொழுதுள்ள நடைமுறைகள் தொடரும்.

99 வருட காலம் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருந்து பழக்கப்பட்டுப் போன மக்களிடம் எதையும் உடனடியாக புதிதாகத் திணிக்கும் நோக்கம் சீனாவிடம் கிடையாது.

ஹொங்கொங்கின் பொருளாதாரம் ஆட்டம் காணக் கூடாது என்பதற்காக ஹொங்கொங்கில் தற்பொழுது அமுலில் இருக்கும் தாராளமயக் கொள்கையை தொடர்ந்து அமுல் செய்வது என்பதில் சீனா உறுதியாக இருந்து வருகிறது.

### தாராள கொள்கை 50 ஆண்டுகள் தொடரும்

1984 ஆம் ஆண்டு ஹொங்கொங்கை சீனாவிடம் கையளிப்பது தொடர்பான ஒப்பந்தம் சீனாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் கைச்சாத்தான போது ஹொங்கொங்கின் டொலர் மதிப்பிழந்தது. பங்குச் சந்தையிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

ஹொங்கொங்கில் கோடிக் கணக்கான டொலர்களை முதலீடு செய்த மேற்கு நாட்டவர்கள் பலர் ஹொங்கொங்கை விட்டு வெளியேற

**சஞ்சாரன்**

முற்பட்டனர்.

1997 ஜூன் 30 நள்ளிரவில் ஹொங்கொங் சீனாவிடம் கைமாறும் போது ஹொங்கொங்கில் பொருளாதார சுபீட்சத்துக்கு எதுவும் இராது என்ற நிலைமை உருவான போது தற்போதுள்ள தாராளக் கொள்கை தொடர்ந்து 50 வருடங்களுக்கு அமுலில் இருக்கும் என்று அப்போதைய சீனத் தலைவர் டெங் சியா ஓ பிங் அறிவித்தார்.

### [illegible] குழப்பங்கள்

பிரிட்டிஷ் கடற்படை 1841 இல் ஹொங்கொங்கை கைப்பற்றிய போது ஹொங்கொங் மக்கள் இல்லாத வெறும் தீவாகவே காட்சி அளித்தது.

ஹொங்கொங்கை பிரிட்டனின் ஒரு குடியேற்ற நாடாக்க முடியுமா? என்ற கேள்வி கூட அப்போதைய

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## அபின் யுத்தத்துடன் ஆரம்பமான ஹொங்கொங்கின் புதிய வரலாறு

★ 1839 - சீனாவில் பிரிட்டிஷார் நடத்தி வந்த அபின் வர்த்தகத்தை சீனச் சக்கரவர்த்தி தடை செய்ய முயன்றார். பிரிட்டிஷ் கடற்படை இதற்கு பதிலடியாக தாக்குதல் தொடுத்த போது முதலாவது அபின் யுத்தம் ஆரம்பமானது.

★ 1841 — கடற் கொள்ளையரின் தீவு (PIRATE ISLAND) என்று அன்று வர்ணிக்கப்பட்ட ஹொங்கொங்கை பிரிட்டிஷ் கடற்படை பிடித்தது. பிரிட்டிஷ் கடற்படை கப்டன் சார்ள்ஸ் எலைற் ஹொங்கின் ஆளுனரானார்.

★ 1841 — ஆளுநர் சார்ள்ஸ் எலைற் ஹொங்கொங் துறைமுகத்தை சகல நாடுகளும் சுதந்திரமாகப் பயன்படுத்தும் விதத்தில் தீர்வை யற்ற துறைமுகமாகப் பிரகடனம் செய்தார்.

★ 1842 — முதலாவது அபின் யுத்தம் முடிவடைந்தது. சீனாவின் நாங்கிங் நகரில் பிரிட்டனும் சீனாவும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன 1898 முதல் அமுலுக்கு வரத்தக்கதாக ஹொங்கொங் குத்தகைக்கு பிரிட்டனிடம் வழங்கப்பட்டது.

★ 1850 — சீனாவின் தைபிங் நகரில் பணக்கார

( 5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பொறுப்பின் கீழ் கிழக்குப் பகுதி

## மொறவெவ தாக்குதலை அடுத்து ஏற்பாடு

திருகோணமலை, மே 18

மொறவெவ பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலை அடுத்து கிழக்கு மாகாணம் ஊவா பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களுக்கு முன்னர் தனித் தனியே பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் பணியாற்றி வந்தார்கள். பின்னர் போதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இல்லாத காரணத்தால் பிரதிப் பொலிஸ்மா அதிபர் இன்றியே கிழக்கு மாகாணம் இருந்து வந்தது.

தற்சமயம் மொறவெவ தாக்குதலையடுத்து ஊவா மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் குமாரசிறி கமகே கிழக்குப் பிராந்தியத்துக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை அடுத்து அவர் தாக்குதல் நடந்த மொறவெவ பொலிஸ் நிலையத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார். (ஐ-3)

## கூட்டம்

யாழ்ப்பாணம் உளநல சங்கத்தினரின் விசேட கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இயங்கி வரும் தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலையில் காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

# சமய, கல்வி நலன்களுக்காக உழைத்தவர் மு. ஞானப்பிரகாசம்

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும்.

இது திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்களின் இலட்சியக் கனவாக இருந்தது.

அவருடைய காலத்திலேயே அது நிறைவேறிய போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. அதுவும், அவர் மாணவனாய்க் கல்வி கற்று, ஆசிரியராய்க் கடமை புரிந்து, அதிபராய் நிர்வகித்த பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாக உருவாகியது அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. உயர்கல்வியின் நிலைக்களனாக பல்கலைக் கழகமொன்று இங்கிருந்தால் இங்குள்ளவர்கள் சிரமமின்றி உயர்கல்வி கற்றுக் கல்விமான்களாக வளர முடியும் என்பது அவரது உயர்வான எண்ணம்.

1911 ஆம் ஆண்டு ஏழாலைக் கிராமத்தின் தவப்புதல்வராகப் பிறந்த ஞானப்பிரகாசம் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற்றார். முதலில் விஞ்ஞானக் கல்வி கற்று விஞ்ஞானப் பட்டதாரி ஆனார். பின்னர், கலைப் பாடங்களில் பட்டம் பெற்று கலைமாணி ஆனார். அவர் சைவ சித்தாந்தத்தில் முழுத் தேர்ச்சி பெற்று ''சித்தாந்த வித்தகர்'' எனும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். ஒரு குருவின் மூலம் தான் மெய்ஞ்ஞானத்தைப் பெற முடியும் என்ற எமது சமயக் கோட்பாட்டின்படி அவர் அருளானந்தசிவம் அவர்களைத் தமது குருவாக அடைந்தார்.

### புராணங்களைக் கற்றுத் தேர்ந்தார்

தமிழிலுள்ள புராணங்கள் யாவற்றையும் அவர் கற்றுத் தேர்ந்தார். இவர் பொறுப்பேற்று நடத்தி வந்த மடாலயம் என்னும் ஏழாலை கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் ஐம்பது வருடங்களாகப் புராண படனம் செய்து வந்தார். வருடந்தோறும் திருவாதவூரடிகள் புராணமும், பெரிய புராணமும் படித்துப் பயன் சொல்லுவார். இவர் பயன் சொல்லும் பாணி அலாதியானது. தூரத்திலே இருந்து கேட்போருக்கும் கேட்கக் கூடிய உரத்த சாரீரம். சொற்களை அறுத்துறுத்து அழகாக உச்சரிக்கும் தன்மை; புராணம் பாடுபவர் எந்த இராகத்தில் பாடுகிறாரோ அதற்கேற்ப பயன் சொல்லும் பாணி; பக்திச் சுவை ததும்பி உருக வைக்கும் குரல் என்பன கேட்டுக் கொண்டிருப்பவர்களைப் பரவசப்படுத்திவிடும்

பெரிய புராணத்தில் அத்தனை பாடல்களும் அவருக்கு மனப்பாடமானவை. எந்தப் பாடல் எத்தனையாம் பாடலாக வருகிறது என்பதைக் கூட அவர் சொல்லி விடுவார், ஒவ்வொரு வருடமும் மூன்று மாதங்களாகப் பெரிய புராணப்படிப்பு நடத்தி, ஆடி மாதம் சோதியிலன்று படிப்பு நிறைவுறும் நாளில் பெரிய புராணத்தின் நிறைவுப்பாடலான,

என்றுமின்பம் பெருகு
மியல்பினால்
ஒன்று காதலித் துள்ள
மோங்கிட
மன்று ளார்டி யாரவர்
வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி
யுலகெலாம்

என்பதனை மூன்று முறைகள் பாடி முடிக்கும் போது அவரது முகத்திலே தெரியும் மகிழ்ச்சியை, நிறைவை, பரவசத்தை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது.

அமரர் ஞானப்பிரகாசம் அவர்கள் தமிழ்ப்புலமையோடு ஆங்கிலம், சமஸ்கிருதம் என்னும் மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். மிகத் தெளிவாக அழகாக ஆங்கிலம் பேசுவார். வடமொழி அவர் வாயிலே சரளமாக வரும். அதிகாலையில் ஆலயத்திற்கு வந்து அவர் பாடும் சமஸ்கிருத ஸ்லோகங்களைக் கேட்கும்போது வியப்பாக இருக்கும். அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சில நூல்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய ஆங்கில நூல்களில் ஒன்று Tamilakam & Saiva Thought (தமிழகமும் சைவ சிந்தனைகளும்) என்பதாகும்.

திருக்கேதீஸ்வரஆலயத்தின் திருப்பணிச்சபைத் தலைவராக இருந்த ஞானப்பிரகாசம் அவர்கள் பலவித இன்னல்களுக்கு மத்தியில் அவஸ்தையுறு வாழும் மக்களுக்காக, திருக்கேதீஸ்வரம் முதலான சில ஆலயங்களில் 1986 ஆம் ஆண்டு உலக நலத்தின் பொருட்டு ஒரு பிரார்த்தனை நடைபெற ஒழுங்கு செய்தார். அப்பிரார்த்தனையானது நமது சமயாசாரியார்களில் ஒருவரான திருஞானசம்பந்த சுவாமிகளை ஷோடஸ மந்திரங்களால் அர்ச்சனை செய்து வழிபடுதலாகும். அதன் பொருட்டு ஷோடஸ மந்திர நாமாவளியை தாமே இயற்றி வெளியிட்டார்.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்பதற்கிணங்க திரு. ஞானப்பிரகாசம் அவர்களும் தாம் பெற்ற கல்வி இன்பத்தை எல்லோரும் பெற வேண்டுமென விரும்பினார். தனக்குத் தெரிந்த சிறுவர்களை அவர் காணும் போது முதல் கேட்பது, ''தம்பி நீ என்ன வகுப்புப் படிக்கிறாய். என்னென்ன பாடங்கள் படிக்கிறாய்'' என்பது தான், ரியூற்றறிகள் ஆரம்பிக்காத அந்தக் காலத்தில் ''எம்பெருமக்கள் கல்வி நிலையம்'' என்று ஒன்றைத் தம் ஊரில் ஆரம்பித்து இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

நீத்தார் நயப்புரை

### விருப்பமும் கவலையும்

இந்தச் சமூகம் அருளும், அறிவும் நிறைந்த சமூகமாக உருவாக வேண்டும் என்று அவர் மிக விரும்பினார். ஆயின், அவரது இறுதி நாள்களில் சில விஷயங்கள் பற்றி அவர் கவலை கொண்டிருந்தார்.

''எங்கள் மரபுகள் பேணப்படாமல் அழிந்து போகின்றன. நமது பாரம்பரியப் பழக்கங்கள், பண்பாடுகள், கலாசாரங்கள்கைவிடப்பட்டு அருகி வருகின்றன. நாகரிகம் என்ற பெயரில் வெளிநாட்டுப் பழக்கங்கள் மேலோங்கி வருகின்றன.

ஆலயங்களில் ஆத்மார்த்தமான வழிபாடுகளிலும், பள்ளிக் கூடங்களில் முறையான பண்பாட்டுக் கல்வியிலும் இளைய சமுதாயத்தை ஈடுபடுத்த வேண்டும் — அவருடன் பழகி உரையாடுபவர்களுக்கு அவர் சொன்ன விஷயங்கள் இவை.

எமது நாட்டில் அமைதியான, அழகான சூழ்நிலை ஏற்படவேண்டி இந்தியத் திருத்தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ளத் தீர்மானித்தார். அங்குள்ள புனித தீர்த்தங்களைக் கொண்டுவந்து எமது நாடெங்கும் தெளிக்க வேண்டும் என்ற விருப்பத்தோடு மூன்று வருடங்களுக்கு முன் இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொள்ளப் புறப்பட்டவர் உடல் நிலை இடம் கொடுக்காததால் கொழும்பு போய்த் திரும்பிவிட்டார்.

சைவப்பெரியார், சித்தாந்த வித்தகர், விஞ்ஞானமாணி, கலைமாணி என்று பட்டங்களைப் பெற்ற ஞானப்பிரகாசம் அவர்கள் புகழ் விரும்பாதவர். எளிமையை விரும்புபவர், நாலுமுழ வேட்டியும், சால்வையும், உருத்திராக்க மாலையுமாய் எளிமையாகக் காட்சி தருபவர், அவர் சிலகாலம், தமிழரின் தேசிய உடையான வேட்டி, சால்வை மட்டுமே அணிந்து சேட் அணியாது பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராய்க் கடமைபுரிந்து காட்டிய உதாரண புருஷர்.

அமரர் ஞானப்பிரகாசம் அவர்கள் கடந்த வருடம் தமது எண்பத்தைந்தாவது வயதில் சிவப்பதப் பேறெய்தினார். அவர் வாழ்ந்த உயர்ந்த வாழ்வை, அவரது [illegible] வோமாக.

—திருமதி எம். இந்திராணி

# அபிவிருத்தி அலுவலர் பரீட்சை: விண்ணப்பக் கட்டணம் மீளளிப்பு

யாழ்ப்பாணம், மே 18

வடக்கு—கிழக்கு மாகாண சபையினால் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்காக கடந்த 1994 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பின்னர் அப்பரீட்சை இரத்து செய்யப்பட்டது.

தற்போது இந்தப்பரீட்சைக்கான கட்டணங்களை மீள வழங்குவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். பிரதேச செயலகம் மூலமாக மேற்படி போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பித்தவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பரீட்சைக்குரிய கட்டணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

க. பொ. த. சாதாரண தரம்சித்தியடைந்தபொருத்தமானவர்களிடம் இருந்து இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இந்தப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தத்தம் பிரதேச செயலகங்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்பினர்.

மேற்படி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு தற்போது பட்டதாரிப் பயிலுநர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் க. பொ. த.சாதாரண தரத்தினை தமது கல்வித் தகைமையாகக் கொண்டவர்கள் வேலைவாய்ப்பை இழக்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

(ஐ-5)

## கடன் திட்ட விளக்கக் கூட்டம்

வலி. மேற்கு, மே 18

''சுரதுர'' என்னும் கடன் திட்டம் தொடர்பான விளக்கங்களையும் விவரங்களையும் பயன்பெறுவோருக்கு விளக்குவதற்கான கூட்டமொன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் உதவி அரசாங்க அதிபர்பிரிவின் அனுசரணையுடன் சுன்னாகம் இலங்கை வங்கிக்கிளையினர் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளனர்.

படித்து முடித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களை சுயதொழிலில் ஊக்குவிப்பதற்காகவும், உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும்'சுரதுர' என்னும் கடன் திட்டம் வங்கிகளூடாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. (ஐ-152)

★ மதவடிச் சம்பவம்

# அடி காயங்களுடன் மேலும் ஐவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், மே 18

சுன்னாகத்துக்கும்- மல்லாகத்துக்கும் இடைப்பட்ட மதவடி என்னுமிடத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற அமுக்கவெடிச் சம்பவத்தை அடுத்து தாக்கப்பட்டு காயமடைந்தவர்களில் மேலும் ஐவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மல்லாகத்தைச் சேர்ந்தவர்களான எ. பவளநாதன் (வயது 38), எஸ். பழனிவேல் (வயது 35), எஸ். ரவீந்திரன் (வயது 36) மற்றும் சுன்னாகத்தைச் சேர்ந்தவர்களான எஸ். அப்புத்துரை (வயது54), எ. ஜெகநாதன் (வயது 17) ஆகியோரே காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் படையினரின் தாக்குதலினால் காயமடைந்த 11 பேர் நேற்று முன்தினம் யாழ், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே. (ஐ-15)

## அழுகிய சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே, 18

வேலணை கடற்பிராந்தியத்தில் மிதந்து கரை ஒதுங்கியதாகத் தெரிவித்து இனந்தெரியாத ஆணின் சடலம் ஒன்று அழுகிச்சிதைந்த நிலையில் நேற்று ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

துர்நாற்றம் வீசும் நிலையில் இருந்த இந்த இனந்தெரியாத சடலம் இனம் காணும் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ -15)

# யாழ். பாடசாலைகளிலும் நாளையே சீருடை விநியோகம்

## அதிபர்களுக்கு பணிப்பாளர் உத்தரவு

யாழ்ப்பாணம் மே 18

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் நாளை திங்கட்கிழமை காலை 9. 30 மணிக்கு மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வைபவ ரீதியாக வழங்கப்பட வேண்டும் என்று யாழ். கல்வித் திணைக்கள வலயம் ஒன்றின் பணிப்பாளர் சு. இரத்தினராசா அறிவித்துள்ளார்.

இதற்கு வசதியாக யாழ். இந்துக்கல்லூரியில் உள்ள களஞ்சியத்தில் இருந்து சகல கோட்டக்கல்வி அதிகாரிகளும் தத்தமது கோட்டத்துக்குரிய சீருடைகளை இன்று ஞாயிற்றுக் கிழமை பெற்று உடனடியாகவே அவற்றை அதிபர்களிடம் ஒப்படைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சீருடைகளைத் தவறாது பெற்றுக் கொள்ள சகல மாணவர்களையும் நாளை திங்கட்கிழமை பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக சீருடைகளை விநியோகித்து அது தொடர்பான அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறும் கல்விப்பணிப்பாளர் அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

(ஐ-118-173)

## வீதி திருத்தம்

சாவகச்சேரி, மே 18

பொது மக்கள் பாவிக்க முடியாத நிலையில் சேதமடைந்திருந்த அல்லாரை-கச்சாய் வீதி தற்போது செப்பனிடப்பட்டுள்ளது. சாவகச்சேரி-கச்சாய் வீதி மக்கள் போக்குவரத்திற்கு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் தடைசெய்யப்பட்டுள்ளதையடுத்து கச்சாய், கெற்பலி விடத்தற்பளை போன்ற பகுதி மக்களின் பிரதானபாதையாக அல்லாரை கச்சாய் வீதி விளங்குகிறது.

(ஐ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ஜெ நூலகம்.

# போர் நடவடிக்கையை நெறிப்படுத்த அனுராதபுரத்தில் விசேட செயலகம்

கொழும்பு, மே 18

வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையின் போக்கை நேரடியாகக் கவனிக்கவும், போர் நுணுக்கங்களைப் படையினருக்கு உடனுக்குடன் தெரிவிக்கவும் அனுராதபுரத்தில் விசேட செயலகம் ஒன்று கடந்த வாரம் அமைக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரத்தில் உள்ள கூட்டுப்படைத் தலைமையகத்தின் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள ''தந்திரோபாய தலைமையகம்'' என்ற அந்த அலுவலகத்தில் வடபிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா இருந்து யுத்தத்தை நெறிப்படுத்துகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-150-3)

# ஆரம்பக் கல்விபெறுவது சிறாரின் அடிப்படை உரிமையாக்கப்படும்

## இந்திய அரசமைப்பில் திருத்தம்

புதுடில்லி, மே 18

6 முதல் 14 வரையான வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி வசதி அளிப்பதை இந்திய அரசு அவர்களது அடிப்படை உரிமையாகப் பிரகடனம் செய்யவுள்ளது.

இதற்கென அரசமைப்பின் அடிப்படை உரிமை சாசனத்தை திருத்தி அமைக்க மத்திய அமைச்சரவை உத்தேசித்துள்ளது.

மேற்படி வயது வரம்புக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு கல்வி வசதி அளிப்பதை பெற்றோரின் அடிப்படைக் கடமையாக்கும் வகையில் அரசமைப்புத் திருத்தம் அமையுமென்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பொன் விழாவை ஒட்டி மத்திய அரசு இத்திட்டத்தை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் பல கோடிக் கணக்கான சிறுவர்களுக்கு கல்விவாய்ப்பு கிட்டவுள்ளது. [ஐ]

## ஊனமுற்றோர் சங்சக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 18

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கொழும்புத் துறைவீதியில் உள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் ஊனமுற்றோருக்கு பாடசாலை உபகரணங்கள், ஊன்று கோல்கள் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட உள்ளன. (ஐ)

## நெசவுப் பயிற்சி

அராலி மே, 18

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள சுழிபுரம் மேற்கு கைத்தறி நெசவுப் பயிற்சி நிலையம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இந்தப் பயிற்சி நிலையத்தில் 15 யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். [ஐ-12]

## அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், மே 18

ஏழாலை தென் மேற்கு ஜே-202 கிராம அலுவலர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை திங்கட்கிழமை விநியோகிக்கப்பட உள்ளன. (ஐ)

## 'டெங்கு' வாரத்தை ஒட்டி சிரமதானம்

நெடுந்தீவு, மே 18

'டெங்கு'ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு காரைநகரில் சிரமதானம் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்களுடன் காரைநகர் ஈ.பி.டி.பி பணிமனையினரும்இணைந்து பொது அமைப்புகளின் உதவியுடன் இப் பணிகளை மேற்கொண்டனர். (ஐ-111)

# இந்து நாகரிகத்தின் பல பரிமாணங்களை மாணவருக்குப் புகட்டும் விரிவான நூல்

'இந்து நாகரிகம் மூன்றாம் பாகம்' என்ற நூலினைச் 'சொக்கன்' என அழைக்கப்படும் திரு. க. சொக்கலிங்கம் எம். ஏ. எழுதியுள்ளார். இந்நூலானது க. பொ. த. (உ/த)ப் பரீட்சையில் 'இந்துநாகரிகம்' என்ற பாடத்தினைப் பயிலும் மாணவர்களின் பாடவிதானத்தைக் கருத்திற் கொண்டு, அம்மாணவர்களுக்குப் பெரிதும் பயன் பெறும் வகையில் அமைந்து விளங்குகின்றது.

இந்நூலில் இந்துப் பண்பாடு — ஓர் அறிமுகம், இந்துவெளி நாகரிகம் வேதகால நாகரிகம், ஆகமம் பிரதிபலிக்கும் பண்பாட்டம்சம் மௌரியர்கால நாகரிகம், குப்தர்கால நாகரிகமும் இந்துமத மறுமலர்ச்சியும், தமிழகத்தில் இந்துப் பண்பாடு இந்துசமய சீர்திருத்த இயக்கம், தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு ஆகிய விடயங்கள் பொருளடக்கமாகக் காணப்படுகின்றன. நூலின் பின்னிணைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர், பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் எழுதிய 'சிவாகமங்கள்' என்ற ஆய்வுக்கட்டுரை இடம்பெற்றிருப்பது இந்நூலினை மேலும் சிறப்புடையதாக ஆக்குகின்றது. அதனை நூலாசிரியரே தமது முடிவுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலுக்கு யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

தமிழ், சமயம், பண்பாடு என்பனவற்றில் நன்கு புலமைத்துவம் பெற்றுள்ளவரும் சிறந்த எழுத்தாளருமான இந்நூலாசிரியர், மாணவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் இந்நூலை எழுதியிருப்பது குறிப்பிடற் பாலதாகும்.

'இந்துப் பண்பாடு — ஓர் அறிமுகம்' என்ற இயலில் நூலாசிரியர் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் உள்ள உறவினை ஆதாரங்களோடு குறிப்பிட்டுள்ளார்! 'வேதகால நாகரிகம்' என்ற கட்டுரையானது அக்காலச் சமய நிலை, சமூகநிலை, பொருளாதார நிலை என்பவற்றை விரிவாக விளக்கி அமைகின்றது. ஆகமம் பிரதிபலிக்கும் பண்பாட்டம்சம் என்ற பகுதி, சைவ, வைணவ, சாக்த ஆகமங்கள் புலப்படுத்தும் பண்பாட்டு விழுமியங்களை ஆதாரங்களோடு விரித்துரைக்கின்றது.

## நூல் வரிசை

வட இந்தியப் பண்பாடு பற்றி அறிந்து கொள்வதற்கு இந்நூலிற் காணப்படும் இந்து வெளிநாகரிகம், வேதகால மௌரியர்கால, குப்தர்கால நாகரிகம் பற்றிய கட்டுரைகள் உதவுமென்று கூறலாம். பல்லவ, சோழ, விஜய நகர நாயக்கர்காலத் தமிழக இந்துப் பண்பாட்டை நன்கு விளங்கிக் கொள்வதற்கு இந்நூலிலேயுள்ள, 'தமிழகத்தில் இந்துப் பண்பாடு' என்ற பகுதி பெரிதும் உதவுகின்றது. இந்துமத சீர்திருத்த இயக்கங்களின் தோற்றம், பணிகள் என்பன பற்றியும் இந்நூல் சிறப்பாகச் சித்திரிக்கின்றது. மலேயா, யாவா, சுமாத்ரா போர்ணியோ, பர்மா முதலிய தென்கிழக்காசிய நாடுகளில் காணப்படும் இந்துப் பண்பாட்டம்சங்களை இறுதி இயல் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது.

நூல்: இந்துநாகரிகம்
ஆசிரியர்: சொக்கலிங்கம் (சொக்கன்)

இந்நூலின் நிறைவுரையாகவுள்ள பகுதி, இந்து நாகரிகம் பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுமாறு அமைந்துள்ளது, இந்து நாகரிகத்தை வளர்த்தெடுத்தற்கான சிறிய சிந்தனைகள் இந்நூலிலே இடம் பெற்றுள்ளன, நிறைவுரையில்; ''இந்து சமுதாயம் எள்ளி நகையாடப்பட்ட ஒரு காலம் மறைந்து விவேகானந்தரின் வருகையிலிருந்து உலகின் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக இந்து நாகரிகமானது மறுமலர்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்'' என நூலாசிரியர் குறிப்பிடுவது, அவரின் இந்து சமயப் பண்பாட்டுச் சிந்தனைத் தெளிவினை நன்கு பிரதிபலிப்பதாகவுள்ளது.

இந்து நாகரிகப் பாடத்திட்டத்தைக் கருத்திற் கொண்ட ஆக்கம் என்ற வகையில் இந்நூலுக்குத் தனிச்சிறப்புண்டு. இந்து நாகரிகம் பயிலும் மாணவர்கள் எல்லோரும் படித்துப் பயன்பெறத்தக்கதாக, எளிய நடையில் இந்நூல் விளங்குகின்றது, இந்து நாகரிகத்தின் பல பரிமாணங்களை மாணவர் அறிந்து கொள்வதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரிய வல்லது. இந்நூலில் எழுத்துப் பிழைகள் உள்ளன மறுபதிப்பு வெளிவரும்போது அவற்றைத் திருத்தி வெளியிட வேண்டியது இன்றியமையாததாகும். ★

— மா. வேதநாதன் எம். ஏ.
(இந்து நாகரிகத் துறை, யாழ். பல்கலைக்கழகம்)

## நல்லூரில் சிகிச்சை நிலையம்

நல்லூர் கோயில் முன்பாக பருத்தித்துறை வீதியில் உள்ள நல்லூர் சிகிச்சை நிலையம் மாதத்தில் 2 ஆவது, 4 ஆவது திங்கட்கிழமைகளில் காலை 8 மணி முதல் இயங்கும் என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

# 156 வருட பிரிட்டிஷ்.....

(மூன்றாம் பக்கத் தொடர்)

பிரிட்டிஷ் ஆளுநர் சார்ள்ஸ் எலைற்றால்எழுப்பபப்ட்டது.

ஆனால் கொந்தளிப்பின் நிலை காரணமாக அடிக்கடி மாறிவந்த சீனப் பெரும்பூமி ஹொங்கொங்கில் சீனர் வந்து குடியேறவும் அதனை வளம் கொழிக்கும் நாடாக்கவும் உதவியது.

சீனாவில் காலத்துக்குக் காலம் நிகழ்ந்த வெளிநாட்டுப் படையெடுப்புக்கள் உள்நாட்டுக் குழப்பங்கள் சீனாவில் இருந்து மக்கள் ஹொங்கொங் வந்து குடியேற உதவின.

இறுதியாக 1949 ஆம் ஆண்டு மாஸே துங் அண்மையில் கம்யூனிஸ்ட்டுக்கள் சீனாவில் கட்சியைக் கைப்பற்றிய சமயம் ஆயிரக்கணக்கான சீனர்கள் ஹொங்கொங்குக்குத் தப்பி வந்தனர்.

**சனத்தொகையும் மொழியும்**

பிரிட்டிஷ், ஸ்கொட்டிஸ் குடியேற்றக்காரர்களும் சீனர்களுமாக தற்பொழுது மேற்படி ஹொங்கொங்கின் சனத்தொகை 58 லட்சம் ஆகும் சீனரே பெரும்பான்மையினர். ஆங்கிலமொழியும் கன்ரோனிஸ் மொழியும் ஹொங் கொங்கில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

பிரிட்டனிடம் கையளிக்கப்பட்டபோது ஒரு பயனுமற்ற பூமியாக (BARREN ROCK) இருந்த ஹொங்கொங் இன்று செல்வம் கொழிக்கும் நாடாக மாறி இருப்பதுடன் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட சட்டசபை ஒன்றும் இங்கு இருப்பது பிரிட்டிஷ் ஜனநாயக பாரம்பரியத்தின் சிறப்புத் தன்மையையே காட்டுகிறது.

கடந்த 100 ஆண்டு காலத்தில் சர்வதேச அரங்கில் எவ்வளவோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. சாம்ராஜ்யங்கள் எழுச்சியடைந்தும் வீழ்ச்சியடைந்தும் உள்ளன. இணைந்த நாடுகள் பலபிரிய, பிரிந்துபோன நாடுகள் இணைந்துள்ளன.

ஆனால் பிரிட்டன் ஹொங்கொங்கை மீண்டும் சீனாவிடம் ஒப்படைப்பது மூலம் தனது கனவான் தன்மையை வெளிக்காட்டியுள்ளது. சர்வதேச அரங்கில் தனக்கென்று ஓர் இடத்தையும் அது பிடித்துக்கொண்டு விட்டது. ★

# அபின் யுத்தத்துடன்.....

(மூன்றாம் பக்கத் தொடர்)

வர்க்கத்துக்கு எதிராக 14 வருடகாலம் கிளர்ச்சி இடம் பெற்றது. சீன செல்வந்தர்கள் பலர் ஹொங்கொங்குக்கு தப்பி வந்தனர்.

★ 1858 — 2 ஆவது அபின் யுத்தம் முடிவு.

★ 1894 — 95 ஜப்பானும் பிரான்ஸும் சீனாவைத்தாக்கின. ஹொங் கொங்குக்கு மேலும் ஆயிரக்கணக்கான சீனர் சீனாவில் இருந்து தப்பி வந்தனர்.

★ 1912 ஹொங்கொங் ஆளுநர் கொல்லப்பட்டார்

★ 1938 — ஜப்பானியர் சீனாவின் கன்ரோன் நகரைப் பிடித்தனர். சியாங் கை ஷேக் தலைமையிலான சீன தேசிய வாதிகளுக்கு ஹொங்கொங் ஊடாக ஆயுதங்கள் சென்றன,

1941 — ஜப்பான் ஹொங்கொங்கைப் பிடித்தது. ஹொங் கொங் ஆளுநர் கைதானார்.

1945 — உலக மகா யுத்தத்தில் ஜப்பான் தோல்வி அடைய ஹொங்கொங்கும் ஜப்பானிய ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டது.

★ 1949 — மாஸேதுங் தலைமையில் சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட சீன எல்லையைக் கடந்து ஆயிரக்கணக்கான சீனர்கள் ஹொங் கொங்குக்குள் வந்தனர்.

★ 1982 — அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தட்சர் சீனாவுக்கு விஜயம் செய்து டெங் சியாஓ பிங்குடன் பேச்சு நடத்தினார்.

★ 1984 - 1997 ஜூலை முதலாம் திகதி ஹொங் கொங்கை சீனாவிடம் கையளிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்தனாது. ★


## முக்கிய அறிவித்தல்

வலி. கிழக்கு
வட பகுதி பல நோ. கூ. சங்கம்
அச்சுவேலி

## வருடாந்தப் பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

18 - 05 - 97ஆந் திகதியன்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெறவிருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர் செயலாளர்
வலி. கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம்
அச்சுவேலி.

(சி-739)

## விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழகம்

## பொதுக்கூட்டம்

நாள்: 19 - 05 - 97 (திங்கள்)
நேரம்: மு. ப. 10. 00 மணி
இடம்: கனகசபாபதி மண்டபம் (M1)

அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொளகின்றேன்.

47001) - செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள ''சைனீஸ் பிளேற்றின்'' அச்சியந்திரம் ஏனைய அச்சுக் கூடத்திற்கு தேவையான பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இலக்கம் 01, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். [46981]

**WANTED BRIDE**

Hindu Well Connected Educated Parents Are Seeking For Their Son Good Looking Bride Under 30 Years From Family of Equal Status Apply To C/o No. 614, Uthayan, Jaffna. (46976)

**நல்லெண்ணெய் விற்பனை**

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சாப்பாட்டுத் தேவைக்குகந்த தூய நல்லெண்ணெய் மொத்தமாகவும், சில்லறையாகவும் யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கத்தின் களஞ்சியங்களிலும், சகல கிளைகளிலும் போத்தல் ரூபா 150/- க்கு பெற்றுக் கொள்ளலாம். [சி/726]

**மணமக்கள் தேவை**

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன்ற், ஆசிரியர், கிராமசேவகர், லெக்சறர் ஆகியோருக்கு மணமக்கள் தேவை. குறிப்பு, படத்துடன் தொடர்பு கொள்க: திருஞானசம்பந்த சர்மா, ஸ்ரீமுருகன் சோதிட நிலையம், நல்லூர் வடக்கு வீதி. [46982]

**காணிவிற்பனைக்கு**

மட்டுவல் சந்திரபுர ஸ்கந்த வரோதயா மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் நுணாவில் - மட்டுவில் வீதியில் வீட்டுடன் 03 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு:- 45 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். [46928]

**சித்திரம்**

**O/L**
**மாணவருக்கு**

தீவிர செயன்முறைப் பயிற்சிகளுடன் அறிமுறை விளக்கங்கள் கொண்ட வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

**தூரிகை**
**சட்டநாதர் வீதி, நல்லூர்.**

(46975)

**புதிய வகுப்புகள்**

- ★ கேக் ஐசிங்
- ★ பூவேலை
- ★ கூந்தல் அலங்காரம்

**ஆரம்பம்:**
**02 - 06 - 97**
**திங்கள் மாலை 3. 30**

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன.

**தூரிகை நுண்கலைகள்**
**சட்டநாதர் வீதி, நல்லூர்.**

(46973)

பருத்தித்துறையில்
**Dr. முருகானந்தன் வைத்தியசாலையில்**
**பல் மருத்துவம்**
**(பல்கட்டுதல், 'கிளிப்' போடுதல் உட்பட)**

தினமும் மதியம் 12 மணி முதல் 1 மணி வரை
மாலை 4 மணி முதல் 5 மணி வரை
ஞாயிறு காலை 8 மணி முதல் 12 மணி வரை
நடைபெறுகின்றது.

(சி/736)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 02 — 11 — 1976

உதிர்வு: 31 — 05 — 1993

**செல்வன் சண்முகநாதன் கிரிதரன்**
**(கிரி)**

(சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் - கலைப்பிரிவு)

(திதி பூர்வபக்க - ஏகாதசி) **18 - 05 - 1997**

நாலாண்டென்ன நாலாயிரம் ஆண்டுகள்
உருண்டோடினாலும்
எம் நெஞ்சில் நிறைந்திருக்கும் எம் மைந்தனே!
தாங்கொணாத் துயரிலே தத்தளிக்கும் எங்களுக்கு
உந்தனது நினைவுகளே உளமெங்கும் வாழுதையா!
மறைந்தும் மறையாதிருக்கும் எம் செல்வமே - உன்
வஞ்சனையற்ற வார்த்தைகள் ஓயாமல் ஒலிக்கிறது.
பூரண மதிபோன்ற உன் முகமும் பவள வாய்
புன் சிரிப்பும்
நாம் இனி எப் பிறப்பில் காண்போம்?

உன் ஆத்மா சாந்தி பெற வேரற்கேணிக் கந்தன் திருவடியை வணங்குகிறோம்.

**தகப்பன், தாய்,**
**சகோதரி, பேர்த்தியார்.**

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

(சி/ 738)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 1932

உதிர்வு: 18 — 04 — 1997

**திருமதி சுப்பிரமணியம் கண்ணம்மா**

(பிறப்பிடம்: புங்குடுதீவு 7ஆம் வட்டாரம், வசிப்பிடம்: கனடா)

**திதி: 18 - 05 - 1997**

அன்பின் திருவுருவமாய் பாசத்தின் பிறப்பிடமாய் எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த விளக்கே! எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உம் நினைவுகள் எமைவிட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

விநாயகர் வீதி,
நல்லூர்வடக்கு,
யாழ்ப்பாணம்.

(46983)

# பெண் பொலீஸார் வவுனியாவில் கடமை

வவுனியா, மே 18

வவுனியாவில் வெள்ளியன்று அனேகமாக முழு அளவில் பெண்பொலீஸாரே கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த சில தினங்களாக மிகவும் குறைந்த எண்ணிக்கையில் கடமையில் ஈடுபட்டிருந்த ஆண் பொலீஸார் அன்று காணப்படவில்லை.

அவர்கள் பெரும்பாலும் படையினரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கலாம். இந்த நிலையே இங்கு தொடரும் என எதிர் பார்க்கப்படுகிறது. (இ-164)

# விவசாய நிலங்களின் விவரம் சேகரிப்பு!

உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட எல்லைக்குரிய விவசாயக் காணி பற்றிய விவரங்கள், விவசாய குடும்பங்கள் பற்றிய பூரண விவரங்கள் என்பன விவசாய சம்மேளனங்கள் மூலம் திரட்டப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த வலிகாமம் விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள், விவசாயக்கடன்கள் போன்ற பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக விவசாய சம்மேளனங்கள் மூலம் இவ்விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

வலிகாமம் தவிர்ந்த வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு இத்திட்டங்கள் ஏற்புடையதல்ல எனவும் தெரிவிக்கப்பட்டது.

உடுவில் கமநல சேவை நிலையத்தில் விவசாய சம்மேளன தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் இத்திட்டங்கள் சம்பந்தமாக தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்ப படிவங்களை சம்மேளன தலைவர்களிடம் கையளித்து திட்டம் சம்பந்தமாக அவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

ஈவினை, ஏழாலை, குப்பிளான், புன்னாலைக் கட்டுவன், சுன்னாகம், கந்தரோடை, உடுவில், சங்குவேலி, இணுவில், தாவடி, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாய சம்மேளன உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கோப்பாய், புத்தூர், தெல்லிப்பழை, மற்றும் வலிகாமம் பகுதிகள் உள்ளிட்ட பிரதேசங்களிலேயே இத்திட்டங்கள் முக்கிய இடம் கொடுத்து செயற்படுத்தப்பட உள்ளன. (ஐ-152)

## புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத் திருவிழா

நாளை மறுதினம் 20-05-97 அன்று காலை (புதிய நேரப்படி) 7-30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச் சொரூப ஆசீரும் நடைபெறும். அதற்கு ஆயத்தமாக 19-05-97 அன்று மாலை 5.00 மணிக்கு நற்கருணை ஆராதனையும் பவனியும் ஆசீரும் இடம் பெறும்.

**பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.**

(46960)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**நாகரத்தினம் வேலாயுதம்பிள்ளை**

(நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி காலஞ்சென்ற வைத்தியாச்சாரி காசிநாதர் வேலாயுதம்பிள்ளையின் மனைவி)

19 - 04 - 97 இல் 259, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

17 - 05 - 97 சனிக்கிழமை வில்லூன்றி தீர்த்தக் கரையில் கிரியைகள் நடைபெற்றன. 18 - 05 - 97 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், 259, நாவலர் வீதியிலுள்ள இல்லத்தில் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

சித்த வைத்திய கலாநிதி வே. குகமூர்த்தி.
''கந்தையா வளவு''
259, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (46957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஆலயத்தில் அலங்கோலம்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. ஆனால் இப்போது கோயில் உள்ள ஊரெல்லாம் உண்மையான பரிபாலன சபை என்றும், வழிபடுவோர் என்றும், தாம் தான் உரித்துடைய தர்ம கர்த்தாக்கள் என்றும் சண்டை நடக்கிறது!

ஆலயம் ஒரு புனிதமான இடம். ஆன்மாவை ஆண்டவனுடன் லயிக்கச் செய்வதற்கான இல்லம். வாழ்க்கையில் அறநெறிகளையும் அருள் நெறிகளையும் பின்பற்றுவதற்குத் தூண்டும் ஸ்தலம்.

ஆனால் குடாநாட்டில் உள்ள மிகப் பல ஆலயங்கள் பலவித சண்டைகளுக்கும் மோதல்களுக்கும் இருப்பிடங்களாக மாறி வருகின்றன. இது மிகவும் மன வேதனைக்கு உரியதாகும். சைவ சமயத்துக்கே இது பெரும் இழுக்காக மாறி வருகிறது,

பக்தர்கள் — மக்கள் — நேர்த்திக் கடன் என்றும், திருப்பணி வேலைகளுக்கு என்றும், நாளாந்த வழிபாட்டுக் கிரியைகள், பூசைகளுக்கு என்றும் ஆலயங்களுக்குக் காணிக்கை செலுத்துகிறார்கள். மிகக் குறிப்பாக ஊர்கள் தோறும் உள்ளசிறிய சிறிய கோயில்களுக்குக் கூட வெளிநாடுகளில் இருந்து காணிக்கை வருகிறது.

இந்தப் பணத்தை மையமாக வைத்து அதில் கண் வைத்து சமயப் பணி செய்வதற்குப் புறப்படும் சிலர் மோதிக் கொள்வதால் வருவது ஒரு ரகமான சண்டை.

கோயில் சந்ததி வழியால் தமக்குத் தான் உரிமையானது, அதன் நிர்வாகம் எந்த வழியிலும் அடுத்தவர் கைக்குப் போய் விடக் கூடாது என்பதில் கவனமாக இருப்பவர்களுக்கும், அதனை விரும்பாது தாமும் நிர்வாகத்திற்குள் நுழைந்து விட வேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்கும் இடையே நிகழ்வது இன்னொரு வகைச் சண்டை.

உரிமையாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருக்கும் போது அவர்களும் தத்தமது அதிகாரங்களை, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை நிலை நாட்ட மோதிக் கொள்கின்றார்கள்.

நிர்வாகத்தில் முதியவர்களும், வழிபடுவோரில் அனேகர் வயது குறைந்தவர்களாகவும் இருக்கும் ஆலயங்களில், சுவாமியை எந்த வாகனத்தில் வீதி உலாக் கொண்டு வருவது என்ற சிறிய விடயங்களுக்குக் கூட இரு சாராரும் சண்டை போடுகிறார்கள்.

ஆலய நிர்வாகிகள் மக்களுக்கு முன்னுதாரணமாக இருந்து அருள் நெறி, சமூக நெறி, வாழ்க்கை நெறிகளை வளர்க்க வேண்டியவர்கள்.

ஆனால் இப்போது நடப்பதெல்லாம் குளிக்கப் போய்ச் சேறு பூசும் அலங்கோலங்களே! ஆன்மாவைத் தூய்மைப்படுத்த உதவ வேண்டிய ஆலயம் மாசுபடுத்தப்படுகிறது. ஆணவம் ஒழிக்கப்படுவதற்குப் பதிலாக அகங்காரம் வளரும் இடங்களாக மாற்றப்படுகின்றன ஆலயங்கள்.

இது குறித்துச் சற்றுக் கருத்தூன்றிச் சிந்திக்கக் கூடாதா? ஆலயச் சண்டைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பது எப்போது?

# மொறவெவவில் பாதுகாப்புத்தீவிரம்

## புலிகளின் தாக்குதலை அடுத்து

கொழும்பு, மே 18

மொறவெவவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து அந்தப் பகுதியிலும்—

சுற்றிலும் உள்ள கிராமங்களிலும்—பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை இராணுவத் தளபதி நிஹால் ஜெயக்கொடியும் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் சேனனாயக்க பலப்பிட்டியும் கிராம மக்களின் வேண்டுகோளை அடுத்து புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

திருகோணமலைக்கும் மொறவெவவுக்கும் இடையில் போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

சமீபத்தில் மொறவெவவில் புலிகள் நடத்திய தாக்குதலில் 12 பொலீஸாரும் 3 ஊர்காவலரும் 8 பொதுமக்களும் கொல்லப்பட்டது தெரிந்ததே. (இ-5)

# சாவகச்சேரிக்கு தொலைபேசி வசதி

யாழ்ப்பாணம், மே 18

சாவகச்சேரி நகருக்கு—வெளியிடங்களுடனான—தொலைபேசி வசதி இன்னும் மூன்று நான்கு நாள்களில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று தொலைத் தொடர்பு பரிசோதகர் தலைமையில் சாவகச்சேரிக்குச் சென்ற தொலைத்தொடர்பு அதிகாரிகள் அங்கு தொலைத் தொடர்புக் கோபுரத்தைச் செப்பனிட்டு அமைக்கும் பணியை ஆரம்பித்ததாகத் தெரியவருகின்றது.

சாவகச்சேரியில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு அருகில் தொலைபேசி மையம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கோபுர வேலைகள் பூர்த்தியானதும் தொலைபேசி வசதியை வழங்கக் கூடியதாக இருக்கும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

# 'சஜிந்த' கப்பலில் 85 தபால் பொதிகள்

குடா நாட்டுக்கான 85 வெளியூர் தபால் பொதிகள் 'சஜிந்த' கப்பலின் மூலம் திருமலையில் இருந்து இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

திருமலையில் இருந்து தபால் பொதிகளைப் பயணிகள் கப்பல் மூலம் எடுத்து வரும் புதிய நடைமுறைப்படி இப்பொதிகள் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இத் தபால் பொதிகளும், ஏற்கனவே 'தாரகி' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட 19 தபால் பொதிகளும் தரம் பிரிக்கப்பட்டு நாளை திங்கட்கிழமை முதல் கடிதங்கள் விநியோகிக்கப்படும் என்று யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

கொழும்பில் தேங்கிக் கிடந்த சகல தபாற்பொதிகளும் அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாக அங்கிருந்து அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 15 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரை வகைகள் வந்தன

யாழ்ப்பாணம், மே 18

சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரை வகைகள் கொழும்பில் இருந்து விமானம் மூலம் நேற்று இங்கு எடுத்துவரப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் முத்திரை வகைகளுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக இந்த முத்திரை வகைகள் தருவிக்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த முத்திரை வகைகள் உபதபாலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அமோனியம் சல்பேற்

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு அமோனியம் சல்பேற் உரத்தை அந்தர் 725 ரூபாவுக்கு வழங்கிவருகிறது.

# செய்யக் கூடியவையும் செய்யக் கூடாதவையும்

## படையினர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே. 18

பாதுகாப்பற்ற மற்றும் தடை செய்யப்பட்ட பிரதேசங்களில் நடமாடுவது தொடர்பாகவும் —

உயிராபத்தை விளைவிக்கும் ஆபத்தான பொருள்களைக் கண்டெடுத்தல் மற்றும் கையாளுதல் தொடர்பாகவும் பொதுமக்களுக்குப் படையினர் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளனர்.

யாழ். நகரில் நிலைகொண்டுள்ள 512 ஆவது பிரிகேட் படையணியினால் இந்த அறிவுறுத்தல்கள் பற்றிய விவரம் 'உதயன்' அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

'செய்யக் கூடியவையும் செய்யக் கூடாதவையும்' —என்ற தலைப்பில் அமைந்துள்ள அந்த அறிவுறுத்தல்களில் கூறப்பட்டிருப்பதாவது:-

★ பாதுகாப்பற்ற பிரதேசத்துக்குள்ளோ, தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள்ளோ நுழையாதீர்கள். அப்பிரதேசங்கள் பாதுகாப்புப் படையினரால் அடையாளமிடப்பட்டுள்ளன.

★ பாதுகாப்புப் படையினரால் கைவிடப்பட்ட முகாம்கள், பாதுகாப்பு அரண்கள் மற்றும் தீவிரவாதிகளின் முகாம்கள் என்பன அமைந்துள்ள பகுதியை பாதுசாப்பான பிரதேசம் எனப் படையினர் உறுதிப்படுத்தும் வரை அப்பகுதிகளில் நடமாடாதீர்கள்.

★ பொதுவாகப் பகல் நேரங்களிலேயே உங்களது நடமாட்டத்தை மேற்கொள்ளுங்கள்.

★ பயணம் செய்யும் பாதைகளின் ஒரங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்; பாதைகளின் மத்தியில் பயணம் செய்யுங்கள்.

★ பாதுகாப்பானவை என உறுதி செய்யப்படாத வீதிகளிலும், அந்த வீதிகளின் இரு பகுதிகளிலும் உள்ள வெற்று வெளிகளிலும் செல்லாதீர்கள்.

★ அடையாளம் காணமுடியாத பொருள்களையோ, சந்தேகத்துக்கிடமான பொருள்களையோ ஆராய முயலாதீர்கள். அவை பற்றி உடனடியாகப் படையினரின் முகாமுக்கோ அல்லது அருகில் உள்ள படையினருக்கோ தகவல் கொடுங்கள்.

★ முறையாகச் செய்யப்படாத வெடிப்பொருள்களையோ நிலக்கண்ணிகள் அல்லது வெடிக்காத குண்டுகள் என்பனவற்றையோ கண்டால் உடனடியாக அவ்விடத்தில் அடையாளம் இட்டு ஏனைய பொதுமக்களை அவ்விடத்துக்குச் செல்லவிடாது தடுங்கள்.

★ பரிச்சயமற்ற பொருள்களுடன் சிறுவர்களை விளையாட அனுமதிக்காதீர்கள்.

★ படையினர் அனுமதிக்காத — பாதுகாப்பற்ற — பிரதேசங்களில் சிறுவர்களை விளையாட அனுமதிக்காதீர்கள்.

★ தொடர்ந்து பாவிக்கும் பாதைகளை மட்டும் பயன்படுத்துங்கள். தூரம் குறைந்த குறுக்கு வழிகளில் செல்ல முயலாதீர்கள்.

★ வீடுகளுக்குச் சென்று மீளக்குடியமரும் போது வீட்டின் உட்பகுதியையும், வெளிப்புறங்களையும் அங்குலம் அங்குலமாகச் சோதனையிடுங்கள். வீட்டையும், சுற்றுப்புறத்தையும் சோதனையிட 4 அடி நீளமான திடமான தடி ஒன்றைப் பயன்படுத்தலாம்.

★ வீட்டுக்குள் சென்றுவரும் பாதையையும், மலசல கூடங்களையும் மற்றும் வீட்டுத் தோட்டம், வயல் போன்ற பகுதிகளையும் நன்கு சோதனையிடுங்கள்.

★ நிலத்தைத் தோண்டி குண்டுகளை வெளியே எடுப்பது தொடர்பான செய்முறை விளக்கத்தையும், அறிவுறுத்தல்களையும் படையினர் உங்களுக்கு வழங்குவார்கள். (ஐ)

# கனடாவில் யோகர் சுவாமிகளின் பத்து நாள் அஞ்சலிப் பெருவிழா

கொழும்புத்துறை, மே 18

யோகர் சுவாமிகளின் 125 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கனடாவில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் பத்து நாள்களுக்கு பெருவிழா ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அறியவந்துள்ளது.

கனடாவில் உள்ள ஸ்ரீ சிவயோக சுவாமிகள் சிவதொண்டன் நிலையம் யோகர்சுவாமிகளுக்கு அஞ்சலி செலுத்தும் பத்து நாள் பெருவிழாவுக்கும், சுவாமிகள் பற்றிய சிறப்பு மலர் வெளியீட்டுக்கும் ஆயத்தங்களைச் செய்து வருகிறது.

இவ்விழாவினை முன்னிட்டு பஞ்சலோகங்களினால் செய்யபபட்ட யோகர் சுவாமிகளின் திருவுருவச் சிலைகளை முப்பத்தாறு நாடுகளுக்கு எடுத்துச் சென்று ஸ்தாபிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் ஆலோசனையுடன் திருவுருவச் சிலைகள் சுவாமிகளின் பக்தர்கள் வாழும் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, டென்மார்க், சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொறிசியஸ் உட்பட்ட முப்பத்தாறு நாடுகளில் ஸ்தாபிக்கப்படும்.

யாழ்ப்பாணத்திலும் யோகர் சுவாமிகளின் பஞ்சலோக திருவுருவச்சிலை ஸ்தாபிக்கப்படும்.

கனடாவில் ஓகஸ்டில் நடைபெறவுள்ள யோகர் சுவாமிகள் பெருவிழாவில் கலந்து கொள்ளுமாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மாவை ஆதீனமுதல்வர் மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள், துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் சில அறிஞர்களுக்கு அழைப்புக் கிடைத்துள்ளது.

சுவாமிகளின் பெருவிழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரில் ஈழத்திலுள்ள ஆலயங்களின் வரலாறு மற்றும் தர்ம நிறுவனங்கள், இந்து அமைப்புக்கள் பற்றிய விவரங்கள் வெளியிடப்படும் என்று கனடா சிவதொண்டன் நிலையத்தின் செயலாளர் சி. சிவநேசன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறப்பு மலர் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரமாகும். (அ-30)

## நாளை

**வைகாசி 5**

திங்கட்கிழமை

திதி: துவாதசி பிற்பகல் 1.51 வரை.

நட்சத்திரம்: சித்திரை வைகறை 5.21 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 11.52 – 1.22

ராகுகாலம்: 7.22 - 8.52

(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்கப்படி)

# படையினருக்கு இரத்தம் வழங்க கோரிக்கை

கொழும்பு, மே 18

தற்போதைய ராணுவ நடவடிக்கையில் காயமடைந்த படையினருக்கு சிகிச்சை அளிக்க அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாகப் பதில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# இன்று கப்பல் சேவை

கொழும்பு, மே 18

இன்று காங்கேசன்துறையிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு மூன்று கப்பல்கள் திருகோணமலைக்குப் புறப்படும் என யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இக்கப்பல்களில் பயணம் செய்ய பெயர் பதிவு செய்து, அனுமதி பெற்றோரை கப்பலில் பயணம் செய்வதற்குத் தயாராக இன்று காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பஸோ வின்

நேற்றைய வெளியீடுகள்...!

அர்ஜுன், ரோஜா, ரம்பா நடித்த
அடிமைச் சங்கிலி

நாகர்ஜுன் நடித்த
உன்னையே கல்யாணம் பண்ணிக்கிறேன்

விக்கினேஸ் நடித்த
பொங்கலோ பொங்கல்

என்றும் தரமான பிரதிகளுக்கு

**சுப்பஸோ வீடியோ**

★ குறிப்பு:-
பிரதி ஒன்றின் விலை:- 375/-

(சி/740)


# மரண அறிவித்தல்கள்

## முத்துச்சாமி தங்கராசா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக்கொண்ட முத்துச்சாமி தங்கராசா அவர்கள் 17 - 05 - 97 இல் காலமானார்,

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், சவீந்திரதாஸ் (பொதுமுகாமையாளர் ப. நோ. கூ, சங்கம், அச்சுவேலி), இரவீந்திரதாஸ் (தொழில்நுட்பவியலாளர் கல்வித் திணைக்களம்), தவீந்திரதாஸ் (முன்னாள்பொலிஸ்சார்ஜண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மாலினி, கமலேஸ்வரி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரமிளா, கலைச்செல்வி, கிரிசாந்தன், கிரிசாந்தி ஆகியோரின் ஆசைப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 18-05-97 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
த. கவீந்திரதாஸ்
(மகன்)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(47000)

## அப்பச்சி கதிரமலை

(ஓய்வுபெற்ற அரசதிணைக்கள பட வரைஞர்)

சுந்தரோடையைப் பிறப்பிடமாகவும், மாளிகாவத்தையை வசிப்பிடமாகவும், யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவரும், சுன்னாகம் லயன்ஸ் கிளப் அங்கத்தவரும், சமூகசேவையாளருமாகிய அப்பச்சி - கதிரமலை கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் நவமணியின் அன்புக் கணவரும், ஜெயலட்சுமி (Jaffna Genaral Hospital சோதிமத Vavuniya) ஸ்ரீபரம் (Endu Project, Kandy), தயாளினி (சென் அன்ரனிஸ்) சேதீஸ்வரி (Holand), ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசமூர்த்தி (Lanka Cement Ltd. K. K. S ,T. DA,) நகுலேஸ்வரம்பிள்ளை (தொழில் அதிகாரி — Vavuniya), கணேந்திரன் (Malasiya), அலிசன் (British Council, Kandy), தயாபரன் (Holand) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜதாரணி, ரகுலவரணி, யூதீஸ், திருமகள், யசிவன், அரவிந்தன், நாராயணி, மயூரீ, லினேஸ் ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் புதன்கிழமை மாலை 4 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெயலக்ஷ்மி
(மகள்)

'ஜெயவாசா',
கல்லூரி வீதி,
சுந்தரோடை

(46992)

## தம்பையா சுந்தரம்மா

காரைநகர் கோவளத்தைச் சேர்ந்த தம்பையா சுந்தரம்மா 16-05-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பையா அவர்களின் அன்பு மனைவியும், பகவத்சிங்கம், சதாசிவம், மகேந்திரம், காலஞ்சென்ற தவமணி மற்றும் தனம், தனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகரில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சிவராசன் (பேரன்)

ஸ்ரீ சிவா ரேட்ஸ்,
72, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(47013)


**மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்**



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.


## மன்னாரில் மழை

யாழ்ப்பாணம், மே 18

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த கடும் மழையினால் பனங்கட்டிக்கொட்டு வட்டாரத்தில் சில குடிசைகள் வீழ்ந்துள்ளன. குளங்கள் நிரம்பியுள்ளன — தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. (இ-30)

## நேர்முகப்பரீட்சை

பருத்தித்துறை, மே 18

யாழ். கல்வி வலயம் இரண்டிற்கான விசேடபாட ஆலுவலர் தெரிவுக்கான நேர் முகப் பரீட்சை இம் மாதம் 21 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். (இ-118)

## கிளைமோர் தாக்குதல்

தென்மராட்சி, மே 18

நேற்று பிற்பகல் 3.30 மணி அளவில் கொடிகாமத்துக்கு அண்மையில் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்று இடம்பெற்றிருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.

மூன்று படையினர் காயம் அடைந்தனர் என்றும் -

காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரிக்கு கொண்டுவரப்பட்டு ஹெலி மூலம் பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன. (இ-117)

## ஓமந்தையைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

திருக்கலாம் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை நடைபெற்ற சண்டைகளில் 37 போராளிகள் களப்பலியானதாக புலிகளின் அறிக்கை ஒன்று தெரிவித்திருப்பதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

களப்பலியானவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5-10-21)

## கைதானோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

டால் பின்னர் — அது குறித்து அறிவிக்கப்படும்..

அப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டிருந்தவர்கள் என்பது விசாரணைகளின் போது தெரியவந்தால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் குற்றம் செய்திருக்காவிடில் உடன் விடுவிக்கப்படுவர். குற்றவாளியாக இருந்தால் நீதிமன்றத்தால் உரிய தண்டனை வழங்கப்படும்.

குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்படுவோர் குறித்து அவர்களது நெருங்கிய சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கப்படும். அவர்களின் உறவினர்கள், கிராம அலுவலர்கள், அரச அதிகாரி ஆகியோர் முன்னிலையிலேயே அவர்கள் விடுவிக்கப்படுவர்.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் —

யாழ். நகரில் செயல்படும் பல அரசியல் அமைப்புக்கள், விடுவிக்கப்படுவோரின் உறவினர்களிடம் சென்று தமது அமைப்பு படையினரோடு சேர்ந்து எடுத்த நடவடிக்கையின் மூலம்தான் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று கூறி அரசியல் லாபம் தேட முயற்சிப்பதுதான். இதில் எந்த உண்மையும் கிடையாது.

எந்தக் குற்றமும் செய்யாதவர்கள் விசாரணையின் பின்பு சட்டப்படி விடுதலை செய்யப்படுகின்றனர். அது குறித்து உறவினர்களிடம் அறிவிக்கப்படுகின்றது.

கைதிகளின் விடுதலை பற்றிய விவரத்தை எந்த ஒரு அரச சார்பற்ற நிறுவனமும் அறியத்தர முடியாது என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்துகின்றோம் — என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## படையினர் ஓமந்தையை...

(முதலாம் பக்கத் தொடர்)

40 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 123 பேர் கொல்லப்பட்டனர் என அரசு தெரிவிக்கிறது.

கேள்வி;- கடந்த சில நாள்களாக ஓமந்தை நகரை இராணுவம் கைப்பற்றி விட்டதாக தொடர்ந்து கூறப்பட்டு வந்தது. ஆனால் ஓமந்தை நகர் வெள்ளி இரவுதான் கைப்பற்றப்பட்டது என தற்போது தெரிவிக்கப்படுகிறது. ஓமந்தை நகர் கைப்பற்றப்பட்டது என முன்னர் தெரிவித்ததற்கும் தற்போது தெரிவிக்கப்படுவதற்கும் உள்ள வேறுபாடு என்ன?

பதில்;- இராணுவத்தின் தகவல்களின்படி இராணுவ நடவடிக்கையின் முதல் நாள் இராணுவம் ஓமந்தை நகரின் எல்லைக்குள் நுழைந்துள்ளது. வெள்ளிக்கிழமையே ஓமந்தை நகரை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

கேள்வி:- இராணுவம் ஓமந்தை நகரில் தரித்து நிற்கிறதா? அல்லது ஓமந்தை நகரைக் கடந்து மேலும் வடக்கு நோக்கி நகர்ந்துள்ளதா?

பதில்:- இராணுவம் தற்போது ஓமந்தை நகரிலேயே தரித்து நிற்கிறது. வெலிஓயாவில் இருந்து நெடுங்கேணியை நோக்கி நகரும் படையணி நெடுங்கேணியை பூரணமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னரே ஓமந்தையில் தரித்து நிற்கும் படைகள் வடக்கு நோக்கி நகரும் எனத் தெரியவருகிறது. (இ-10)


## உதயன் கிளைப் பணிமனை, கொக்குவில்.

'உதயன்' பத்திரிகையில் வெளிவர வேண்டிய உங்கள் அவசர அறிவித்தல்கள் மற்றும் விளம்பரங்கள் இப்போது கொக்குவில் - குளப்பிட்டிச் சந்தியில் உள்ள கிளைப் பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

யாழ். நகரம் வருவதில் உங்களுக்குள்ள தொல்லைகளையும் சிரமங்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பத்திரிகை விநியோகம் சம்பந்தமான பணிகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

கொக்குவில் கிளைப் பணிமனைக்கு வந்து உங்கள் நேரத்தை மிச்சப்படுத்திக் கொள்ளுங்கள்.

காலை முதல் மாலை வரை கிளைப் பணிமனை திறந்திருக்கிறது.

அதிசுவை — தரமான தயாரிப்பு — வரட்சியில் குளிர்ச்சி தரும்

**சிவாஸ் கிறீம் கவுஸ்**

ஒருமுறை சுவைத்துப் பார்த்து எமது ஐஸ்கிறீமின் சுவையை அறிந்து கொண்டால் நீங்கள் தவறாது நாடுவது

**சிவாஸ் ஐஸ்கிறீம்**

உங்கள் மங்கள நிகழ்வுகளின் தேவையை உடனுக்குடன் உங்கள் இல்லங்களுக்கு விநியோகித்துப் பூர்த்தி செய்யத் தயாராக இருப்பவர்கள்

சிவாஸ் கிறீம் கவுஸ்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பழைய முகவரி:
செல்வச் சந்நிதி,
தொண்டமனாறு.

(47223)

## புதிய வீடு விற்பனைக்கு

இல: 609, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், கைலாசபிள்ளையார் கோயில் சுற்றாடலில் ஏறக்குறைய 2000 சதுர அடி கொண்டதும் ஐந்து அறைகள், ஒரு சாப்பாட்டு அறை, இரண்டு படுக்கை அறைகளுடன் கூடிய குளியலறை, மலசலகூட வசதி, வரவேற்பு அறை (Hall), (Marble பதிக்கப்பட்டது), இரண்டு கார்கள் நிறுத்தக்கூடிய பாதுகாப்பான இரும்பு கேற் (Gate) உடன் Garage, பூங்கா, மொட்டை மாடி இவைகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**609, நாவலர் வீதி,**
கைலாச பிள்ளையார் கோயில் அருகில்,
யாழ்ப்பாணம்.

(47005)

## தளபாடங்கள் விற்பனைக்கு

முற்றிலும் மறுசீர் அமைக்கப்பட்ட தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

''DON CAROLIS'' ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட கட்டில்கள், தரம் உயர்ந்த SETTEE SETS, DINING TABLES, DRESSING TABLES, கழற்றிப் பூட்டக் கூடிய முதிரை அலுமாரிகள், உருக்கு அலுமாரிகள், சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட பெட்டகம், SHOW CASE, மீன் தொட்டி, FRIDGE இன்னும் பல தளபாடங்கள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**609, நாவலர் வீதி,**
கைலாசபிள்ளையார் கோயில் அருகில்,
யாழ்ப்பாணம்.

(47006)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org